Registered as a News Paper in Sri Lanka  பக்கங்கள் 06  விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM  *Peoples Daily*  மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஞூ புரட்டாதி மீ 07 உ ஞாயிற்றுக்கிழமை (23-09-1990) ஹிஜ்ரி 1411 ரபி.அப். 03 ஓசை 217

## மக்கள்வங்கி இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் யாழ்ப்பாணக்கிளை அலுவலகம் மிகவிரைவில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்படவுள்ளது. இந்தஇடமாற்றத்திற்கான ஒழுங்குநடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகின. இவ்வங்கிகிளை உத்தியோகஸ்தர்கள் நேற்று யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பிரிவுகட்டிடத்தை ஒழுங்கு செய்து சென்றனர் மிகவிரைவில் தளபாடங்கள் மற்றும் தஸ்தாவேஜுகள் இங்கு மாற்றப்பட உள்ளன. (லோ)

### கச்சேரி, திருநெல்வேலி, கொக்குவில், வண்ணார்பண்ணைப் பகுதிகளில்

# விமானங்கள் குண்டு வீச்சு!

# 6 பேர் பலி; 11 பேர் படுகாயம்!!

## 30க்கு மேற்பட்ட வீடுகள், கோயில், கல்லூரி சேதம்

(யாழ்ப்பாணம்)

*யாழ். நகர் பகுதியிலும், புறநகர் பகுதியிலும் நேற்று சிறிலங்கா விமானப் படை விமானங்கள் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் ஆறு பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு, பத்திற்குமேற்பட்டோர் காயமடைந்தனர். வீடுகள்,கோயில், கல்லூரி என்பன சேதமடைந்தன.*

நேற்றைய சிறிலங்கா விமானப்படையின் தாக்குதல் இலக்குகள் பெரும்பாலும் மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளாகவே இருந்தன. இத் தாக்குதல் கச்சேரி, திருநெல்வேலி, கொக்குவில், ஒட்டுமடம், வண்ணார்பண்ணைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது. கச்சேரிப் பகுதியில் நடந்த தாக்குதலில் கற்பக விநாயகர் கோயிலும், வண்ணார்பண்ணையில் நிகழ்ந்த தாக்குதலில் யாழ். இந்துக்கல்லூரியும் சேதமடைந்தன. இத் தாக்குதல்களின்போது பத்திற்கு மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாயின. இருபதிற்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

## ஓட்டுமடக் குண்டு வீச்சினால் மூவர் மரணம்; ஐவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரை அண்டிய ஓட்டுமடம் பகுதியில் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதி மீது நேற்று நண்பகல 12.30 மணியளவில் சிறிலங்கா விமானங்கள் நடாத்திய குண்டுவீச்சினால் மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டதோடு, ஐவர் பலத்த காயமடைந்தனர். மேலும் சிலர் சிறு காயங்களுக்கு உள்ளாயினர்,

இத்தாக்குதலினால் செ. ஜெஸிந்தா (13 வயது) அ. வ. லாபீர் (29 வயது) அ. மிஸ்ஸினியா (60வயது) ஆகியோரே மரணமடைந்தவர்களாகும்,

நொசாத், அஜ்மீன், ஜரி, சுல்தான், சீனிக்காக்கா, சுல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலிப் பகுதியில் இருவர்பலி; 20வீடுகள்சேதம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காகுண்டுவீச்சு விமானங்கள் நேற்றுமாலை பலத்த குண்டுத் தாக்குதலை பொதுமக்கள் தற்போது செறிவாக வாழும் கொக்குவில்,திருநெல்வேலிப் பகுதியை அண்டிய இடங்களில் நடத்தியது.

திருநெல்வேலி பரமேஸ்வராச்சந்தி, தபால்பெட்டிச் சந்தி,திருநெல்வேலிச் சந்தை, கொக்குவில் ஆடியபாதம் வீதி ஆகிய இடங்களில் வீழ்ந்து வெடித்தமையால் இருபதுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் நடந்த குண்டுவீச்சுத் தாக்குதலின் போது இரண்டு பொதுமக்கள் உயிரிழந்தனர். தபால்பெட்டிச் சந்தியில் நட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விமானக் குண்டு வீச்சிற்கு விநாயகர் கோயில் சேதம்

### ஒருவர் பலி; பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நேற்றுக்காலை குண்டுவீச்சு விமானங்கள் பரவலாகத் தாக்குதல்களைமேற்கொண்டன. விமானங்கள் குண்டு வீசிய இடங்களில் கொடர்ந்தாற்போல் ஹெலி ஒன்று துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது.

நேற்று மதியவேளை மாச்செற்றி விமானங்கள் கச்சேரி-நல்லூர் வீதியிலுள்ள சற்பக விநாயகர் கோயிலடியிலும், அண்மையிலுள்ள வீடுகளிலும் குண்டுகளை வீசின. ஒரு வீடு

(6 ஆம் பக்கம் பாரக்க)

## நூற்றாண்டு காணும் யாழ். இந்துக்கல்லூரி சேதம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படையின் நேற்றைய நண்பகல் குண்டுவீச்சில் குடாநாட்டிலுள்ள தேசியப் பாடசாலைகளில் ஒன்றும், இவ் வருடம் நூற்றாண்டு காணும் கல்லூரியுமான யாழ். இந்துக்கல்லூரியும் சேதமடைந்தது. கல்லூரியின் விடுதியும் சேதத்திற்கு உள்ளானது. (றெ)

## யாழ்.வீதியால் நகருக்குள் வர இராணுவம் வற்புறுத்து

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதிக்குச் செல்லும் தமிழ்மக்களையும், வாகனங்களையும் வவுனியா-யாழ். வீதிவழியாக செல்லுமாறுஇராணுவம் நிர்ப்பந்தம் செய்கிறது. இதன்காரணமாக நகரப்பகுதிக்குச் செல்லும் தமிழ்மக்களின் தொகை குறைந்துவருவதை அவதானிக்கமுடிகிறது.

இராணுவம் தமிழ் மக்கள் நெருக்கமாகவாழும் பகுதிகளுக்குவந்து இனவெறி அழிப்பு வேலைகளில் ஈடுபடாதவாறு விடுதலைப்புலிகள்குறிப்பிட்ட யாழ்.வீதிப்பகுதியில் கண்கா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்கள் மீட்பு

(செட்டிகுளம்)

செட்டிகுளம் பகுதியில் வீடொன்றில் விடுதலைப் புலிகள் சோதனை இட்டதில் சில ஆயுதங்களை மீட்டுள்ளனர். விபரம் வருமாறு: ரி 56 துப்பாக்கி - 1 4 இரவைகூடு 70 ரவைகள் ஜே. ஆர். கைக்குண்டு - 3 (க)

## “எதிர்க்கட்சிகள் ஆதரவின்மையே அரசியற் தீர்வுக்கு முட்டுக்கட்டை”

– ரஞ்சன்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவின்மையினாலேயே வடக்கு கிழக்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி இருக்கிறதென பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசிய ரஞ்சன விஜயரத்தினா எதிர்க்கட்சிகளின் ஆதரவுதமக்கு இருந்தால் தாம் பேச்சு வார்த்தை மூலம் வடக்கு கிழக்குப் பிரச்சினையைத் தமது அரசாங்கம் தீர்த்திருக்குமெனத் தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் ஊர்காவற்படையினரால் மட்டக்களப்பில் 35 தமிழர் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த புதன்கிழமை பெண்கள், குழந்தைகள் உட்பட 35 அப்பாவித்தமிழர்கள் முஸ்லிம் ஊர்காவற்படையும், சிறிலங்கா இராணுவத்தினரும்இணைந்து வெட்டியும், சுட்டும் படுகொலைசெய்ததுடன், பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயத்துக்கும் உள்ளானார்கள்.

புதுக்குடியிருப்பு, தாளங்குடா, தளவாய் ஆகிய பகுதிகளுக்குள் திடீரெனப புகுந்து இவர்களை கடற்கரைப்பகுதிக்குக் கூட்டிச்சென்று படுகொலை செய்ததுடன், இவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொலநறுவையில் புலிகள் தாக்கி ஆறு இராணுவம்பலி; மூவர் காயம்

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டத்தில் ரோந்து சென்றுகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் எனவும் மூன்று பேர் படுகாயம் அடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இத் தாக்குதலினால் இராணுவத்தினர் பிரயாணம செய்த வாகனமும் பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தாய் மடியில் | தாயக மீட்பில் |
|---|---|
| 21 - 01 - 1975 | 24 - 08 - 1990 |

### கனகசபாபதி லோகேந்திரன்

இளம்புலி ஒன்று களம் தனில் சென்று
ஈழமெம் நாட்டினை மீட்டிட வென்று
மனந்தனில் கொள்கை நாட்டியே இந்த
மண்ணினில் தன்னை மாய்த்ததோ இன்று
கைலாஸ் என்று களந்தனில் அழைக்கும்
லோகேந்திரனே எம்முயிர் பாலனே உன்
உயரிய இலட்சியம் மலரும் நன்னாளிலே
எம்மினம் உன்னையும் எண்ணியே மகிழ்வுறும்.

சிற்றூரவை
அரியாலை மேற்கு.

(R-639)

## 31ஆம் நாள் நினைவு

அன்னை மடியில் 07 - 02 - 1940
ஆண்டவன் மடியில் 24 - 08 - 1990

### செல்லப்பா ஜோஜ் அரியராசா

என் நாட்களோ நிழலைப்போல் சாய்ந்து போயிற்று. ஆயினும் என் சகோதர சகோதரிகளே நீங்களாயினும் என்னை மறவாதீர்கள்.

ஆண்டவன் பாதம் சென்று திங்கள் ஒன்று மறைந்தாலும் எம் அகங்களில் இருந்து உம் நினைவுகளோ அகலாது. ஐயா! கொடையில் சிகரமெனச் சிறப்பாக வாழ்ந்தாய் ஐயா! உற்றார் உறவினரின் உறவுகளை வளர்த்தாய் ஐயா! இன்சொல்லேயன்றி வன்சொல்லையறியாத இனியவனே! உம்மை நாம் இழந்துவிட்டோம்.

விளையாடும் விதியின் கை விழுந்திடாமல் எம்மைக் கண்கொண்டு பார்த்திடுவாய். காலமெல்லாம் எம்முடன் தெய்வமாய் இருந்திடுவாய். - இவரின் ஆத்ம சாந்திக்காக 24 - 09 - 1990 திங்களன்று காலை 5.45 மணியளவில் அச்சுவேலி, புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் உற்றார், உறவினர்களை பங்குபற்றி மன்றாடும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள்...

செட்டியார் வளவு,
அச்சுவேலி.

(R/644)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



### பத்மநாதன் விஜயரஞ்சன்

ஆண்டவன் படைப்பு 19 - 07 - 59
அரக்கர் அழிப்பு 25 - 06 - 90

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

உமது பிரிவால் வாடும்
தந்தை, தாய்,
சகோதரர்கள், மைத்துனர்கள்

(R-648)


வரிவிளம்பரம்

விற்பனைக்கு

நிமியா உரம்

விவசாயிகளின் வசதி கருதி சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் விற்பனைக்குண்டு.
B/1413 - மில்க்வைற்

இடம் மாற்றம்

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 44, கஸ்தூரியார் வீதியிலிருந்து இல. 12 பொன்னையா லேன், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உப தபால் அலுவலகத்துக்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (R-1370)


## ஈராக்கிற்குத் தடை

(பீக்கிங்)

பீக்கிங்கில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் ஈராக் கலந்து கொள்வதற்கு ஆசிய ஒலிம்பிக் குழு தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக நடந்த இரகசிய வாகெடுப்பில் 36 அங்கத்துவ நாடுகளில் 27 தடைக்குஆதரவாகவும்,மூன்று நாடுகள் எதிர்த்தும், ஆறு நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஹெலி நோட்டம்

(நாவற்குழி)

சிறிலங்கா விமானப் படை ஹெலிக்கொப்ரர் ஒன்று நாவற்குழி தனங்களப்பு கைதடி ஆகிய இடங்கள் உட்பட கோப்பாய் வெளி, நாவற்குழி வெளி ஆகிய இடங்களையும் வட்டமிட்டு பல மணி நேரம் நோட்டம் விட்டது.

(லோ)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### றோய்ஸ்

குகராசா
சரவணபவன்

ஜனனம்: 02-04-1971
மரணம்: 23-09-1988

இரண்டு வருடம்
இறந்தே போயின...
இன்னும் எங்களுள்
உயிர்த்தே இருக்கிறாய்
உணர்வில். கனவில்
உந்தன் உருவம்
உலவும் வாழும்.

குடும்பத்தினர்
(B-1415)

## சாவகச்சேரியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

ஆரம்ப சுகாதார நிலையங்கள் பல, தென்மராட்சிப் பிரதேசத்தில் வெகு விரைவில் திறக்கப்படவுள்ளதாக சாவகச்சேரீ ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியும் சுகாதார வைத்திய அதிகாரியுமான டாக்டர் தா. சிவபாதம் தெரிவித்துள்ளார்.

இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள் இப்பொழுது மறவன் புலவு, மந்துவில், வரணி, உசன் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்தெரிவித்துள்ளார். (35)

## திலீபனின் 3ஆம் ஆண்டு நினைவாக



தீபமாய் ஒளிர்ந்தாய்
தியாகத் திரு வுருவாகி நின்றாய்
திலீபனே எங்கள் நெஞ்சில்
திவ்வியனாய் நிலைத்து நிற்பாய்
நீ தடம் பதித்த மண்ணில்
நிச்சயம் விடிவு தோன்றும்
தாயகம் மலரும் வேளை - உன்
தாகமும் தணியு மையா.

ஆனைக்கோட்டை. நவாலி,
மானிப்பாய், சுதுமலை,
சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி
சிற்றூரவைகள்.

வி. பு. ம. மு.
மானிப்பாய் பிரதேசம்.

(R. 647)

## 3ஆம் வருட கண்ணீர் அஞ்சலி



| தாயின் மடியில் | தமிழ் மண்ணுள் |
|---|---|
| 16 - 02 - 1955 | 23 - 09 - 1987 |

### சவரிப்பிள்ளை சுஸியாமபிள்ளை யோகரெட்னம்

அன்பனே! யோகா
தன்மானத் தமிழனாய் பிறந்து
எல்லோர்க்கும் இனியனாய் வாழ்ந்து
வாடா மலராய் எம் இதயங்களை அலங்கரித்தாய்
புரட்சிப் புயலென — அன்று நடந்த
எழுச்சி ஊர்வலத்தில் பங்கேற்றாய்
அங்கே! அங்கே .....
தர்மம் தோற்றுவிட்டது
ஆம்! நாம் யோகனை இழந்துவிட்டோம்!!
ஊராரின் கண்ணில் -- நீ
பவனி வந்த அந்நாளை எண்ணி
கண்ணீரில் மௌனமாகினோம்!

இத்திக்கண்டல்
அடம்பன்.

பெற்றோர், சகோதரர்
உற்றார், உறவினர்

(B. 1414)

# உயிரினும் மேலானது

# எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்



"எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது, வீர காவியங்களைப் படைத்திருக்கிறது. அர்ப்பணிப் புகழைச் செய்திருக்கிறது. இவை எல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீர சாதனைகள் ஆனால் எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது. வியக்கத்தக்கது. எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப்பலிகொடுத்துஈடுஇணையற்ற ஒரு மகத்தான தியாகத்தை திலீபன் புரிந்தான். அவனதுமரணம்ஒருமாபெரும் வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டி எழும்பிய நிகழ்ச்சி பாரதநாட்டைத் தலைகுனிய வைத்த நிகழ்ச்சி. உலகத்தின் மனச்சாட்சியை சீண்டிவிட்ட நிகழ்ச்சி."

"திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தமென்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக மக்கள் எல்லோரையுமே எழுச்சி கொள்ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது. திலீபன் உங்களுக்காக இறந்தான். உங்கள் உரிமைக்காக இறந்தான். உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் சுதந்திரத்திற்காக. உங்கள் கௌரவத்திற்காக இறந்தான். தான் நேசித்த மக்களுக்காகத். தான் நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த, உன்னத தியாகத்தை செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கிறான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதிவாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவு கடந்த பாசம் எனக்கு உண்டு. அவன் துடிதுடித்து செத்துக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆன்மா கலங்கும். ஆனால் நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமான திலீபன் தன்னை அழித்துக் கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கிறது. இது அர்த்தமற்ற சாவு என இந்திய தூதர் கூறியிருக்கிறார் தமது உறுதிமொழிகளை நம்பியிருந்தால் திலீபன் உயிர்தப்பியிருப்பார் என்று சொல்லியிருக்கிறார் ஆனால் உண்மையில் நடந்தது என்ன? நடந்து கொண்டிருப்பது என்ன? என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

எமது உரிமைகள் வழங்கப்படும் எமது மக்களுக்கும் எமது மண்ணுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும் தமிழ் மக்கள் தமது பாரம்பரிய தாய்ப்பூமியில் தம்மைத்தாமே ஆளும் வாய்ப்பு அளிக்கப்படும் இப்படியெல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம் எமது மக்களினதும் மண்ணினதும் பாதுகாப்பை இந்தியாவுக்கு பொறுப்பளித்தோம்.

இதனையடுத்து என்ன நடைபெற்றது என்பதெல்லாம் எனது மக்களாகிய உங்களுக்குத் தெரியும்.

தமிழ் அகதிகள் தமது சொந்தக் கிராமங்களுக்குச் செல்ல முடியாது முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்க சிங்களக் குடியேற்றம் துரிதகெதியில் தமிழ் மண்ணை கபளீகரம் செய்தது சிங்கள அரசின் பொலிஸ் நிர்வாகம் தமிழ்ப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது. அவசர அவசரமாக சிங்கள இனவாத அரசயந்திரம் தமிழ்ப் பகுதிகளில் ஊடுருவியது சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில் சமாதானப் படையின் அனுசரணையுடன் சிங்கள அரச ஆதிக்கம் தமிழீழத்தில் நிலை கொள்ள முயன்றது.

இந்தப் பேராபத்தை உணர்ந்து கொண்ட திலீபன் இதற்கு ஏற்ற ஒரு முற்றுப்புள்ளி காண திடசங்கற்பம் கொண்டான்

சிங்கள அரசுடன் உரிமை கோரிப்போராடுவதில் அர்த்தமில்லை பாரதம் தான் எமது இனப்பிரச்சினையில் தலையிட்டது பாரதம் தான் எமது மக்களின் உரிமைக்கு உத்தரவாதமளித்து ஆகவே பாரதம் தான் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது. பாரதம் தான் எமது ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைத்தது. ஆகவே பாரதஅரசிடம் தான் நாம் உரிமை கோரிப்போராட வேண்டும். எனவே தான் பாரதத்துடன் தர்மயுத்தம் ஒன்றைத் தொடுத்தான் திலீபன் அத்தோடு பாரதத்தின் ஆன்மீக மரபில் பெறப்பட்ட அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக் கொண்டான்.

நீராகாரம் கூட அருந்தாது மரண நோன்பை திலீபன் தழுவிக் கொள்வதற்கு 24மணி நேரத்திற்கு முன்னரே நாம் இந்தியதூதர் திரு. டிக்ஸிட்டுக்கு முன்னறிவித்தல் கொடுத்தோம் உண்ணாவிரதம் ஆரம்பமாகி எட்டு நாட்கள் வரை ஒன்றும் நடைபெறவில்லை. பதிலுக்கு இந்திய அரசு ஆதிக்கத்தின் கீழுள்ள தொடர்பு சாதனங்கள் குறிப்பாக அகில இந்திய வானொலி எம்மீது விசமத்தனமான பொய்ப்பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டது. திலீபனின் உண்ணாவிரதத்தை மிகவும் கேவலமாக கொச்சைப்படுத்தியது. ஒன்பதாவது நாள் இந்திய தூதர் இங்கு வந்தார். உருப்படியில்லாத உறுதிமொழிகளை தந்தார் வெறும உறுதிமொழிகளைநம்பிஎமது இனம் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறதுஉருப்படியான திட்டங்களை முன்வையுங்கள் எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வையுங்கள் அதுவரை உண்ணாவிரதம் கைவிடப்பட மாட்டாது என்றேன் உங்களுக்கு திலீபனது உயிரில் அக்கறை இருந்தால் நீங்கள் அவனை வந்து பாருங்கள் எமது மக்களுக்கு முன்பாக அவனிடம் உறுதிமொழிகளை கூறுங்கள் நாம் உண்ணாவிரதத்தை வாபஸ் பெறுகிறோம் என்றேன். அதற்கு இந்திய தூதர் மறுத்து விட்டார்.

எனது அன்பான மக்களே! இந்திய அரசு எமது நியாயமான கோரிக்கைகளைப் புரிந்து காலம் தாழ்த்தாது உருப்படியான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் திலீபன் உயிர் பிழைத்திருப்பான் இன்னமும் இந்திய அரசு எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் காலம் தாழ்த்தி வருகிறது. நாம்கேட்டுக் கொண்டபடி ஒரு இடைக்கால அரசை நிறுவி இன்று எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் சிரத்தைகாட்டுவதை விடுத்து எமக்கு நிபந்தனைகளைவிதிக்கிறது. எம்மோடு கலந்தாலோசிக்காத ஒரு ஒப்பந்தத்திற்கு எமது அங்கீகாரம் கேட்கிறது. இப்போது ஆயுதங்களை ஒப்படைப்பு பற்றி பேசுகிறது. போராட்டத்தை கைவிடச் சொல்கிறது.

நாம் உருப்படியான செயல்முறை திட்டங்களைக் கேட்க இந்தியா உறுதிமொழிகளைத் தருகிறது நாம் விளக்கங்களைத் கேட்க இந்தியா கால அவகாசம் கேட்கிறது. நாம் கோரிக்கைகளை முன்வைக்க இந்தியா நிபந்தனைகளைப் போடுகிறது. இந்த சூழ்நிலையில் நாம் போராட்டத்தை கைவிடமுடியாது மாறாக போராட்டத்தை தீவிரப்படுத்த வேண்டும் தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட தேசிய எழுச்சியாக எமது போராட்டம் புரட்சி வடிவம் பெறவேண்டும்.

முல்லைத்தீவு, திருக்கோண

(5 ஆம் பக்கம் பார்க்க)

- 26.09.1987இல் திலீபன் தியாகமடைந்தார்.
- திலீபனின் மீளாத்துயில்: தமிழீழத்தின் நிரந்தர விழிப்புணர்வுக்கு வித்திட்டது
- விடுதலையும், சுதந்திரமும், எந்த ஒரு அயலவனாலும் நமக்கு பெற்றுக்தரமுடியாதஒன்று, நாமே போராடிப் பெறவேண்டியதொன்று, இரத்தத்தாலும் தியாகத்தாலும் மட்டுமே அடையக் கூடியதொன்று என்னும் பேருண்மையை நமக்கு எடுத்துக்காட்டியது.
- தியாக திலீபம் அணைந்ததை யொட்டி **தலைவர் வே. பிரபாகரன்** வெளியிட்ட அறிக்கை தமிழீழ மக்களுக்கு பல விடயங்களைத் தெளிவுபடுத்தியது, மக்களைப் போராட்டத்திற்கு அணிதிரள வைக்கும் அறைகூவலாக விளங்கியது.
- இன்றைய காலகட்டத்தில் அதனை நினைவு படுத்துவதும் காலத்தின் தேவையாகிறது.



## சாகாவரம் பெற்ற

## சரித்திர புருஷன்

மூன்று ஆண்டுகளுக்கு
முன்னால்...
புரட்சி என்னும்
பூகம்பத்தைப்
பிரசவித்துப் போன
பூ - இவன்!
ஈழவானின்
இருளை அகற்ற
தன் வயிற்றிலே
தீ வளர்த்தவன்!
அவர்களின்
அமைதிக்குப் பின்னே
ஆக்கிரமிப்பு வெறி
அடங்கியிருந்ததை
அகிலத்துக்கு
அடையாளம் காட்ட
ஆவியீந்தவன்!
இருண்டு கிடந்த
இந்த மண்ணுக்கு
இயன்ற மட்டும்
ஒளி வழங்கிட
எழுந்த சூரியன்!
இவனைத் -
துப்பாக்கி வேட்டுக்கள்
துளையிட்டுக் கொல்லவில்லை
அந்நிய அரசின்
அற்பத் தனமே
அவித்து விட்டது!
இவனுடைய இழப்பு
ஈழ மக்களின்
இமைகளையும்
இதயங்களையும்
திறந்து வைத்தது!
இவன்-
வீழ்ந்த இடத்தில்
விடுதலை விருட்சங்களாய்
நாங்கள்
எழுந்து கொண்டிருக்கிறோம்!
ஈழம் மலர்ந்து
இவனது இதயத்தைக்
குளிரவைக்கும் - இது
எங்களின் நம்பிக்கை!
எங்களின் காந்தி
இவனாகிப் போனதால்
இனிமேல்
இளைய தலைமுறைக்கு
இரவல் காந்தியை
எடுத்தியம்பத் தேவையில்லை!
சாவின் மடியிலும்
சாகாவரம் பெற்ற
சரித்திர புருஷன் இவன்!

ஆதிலட்சுமி இராசையா

# 13 - 06 - 1990 க்குப்பின்...
# திருக்கோணமலை குறித்த சில விபரங்கள்

## சூடைக்குடாவில் எரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்

1. கா. கணபதிப்பிள்ளை
2. செ. புவனேஸ்வரன்
3. இ. சித்திரவேலு
4. சி. தியாகராசா
5. இ. கனகசுந்தரம்
6. பா. தேவராசா
7. பா. பொன்னம்மா
8. வே. சித்திரவேலு
9. பா. கணேஸ்வரன்
10. செ. தம்பையா
11. த. சிவானந்தன்
12. இ. வேலாயுதம்
13. க. இராசம்மா
14. பு. பொன்னம்மா
15. பு. ராசா

## இலக்கந்தையில் முற்றாக எரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்

1. மு. சோமசுந்தரம்
2. சோ. சிவபாக்கியம்
3. சோ. பத்மநாதன்
4. வ. தேவராஜா
5. சோ. அற்புதராஜா
6. ஐ. தேவராசா
7. செ. நாகம்மா
8. செ. விநாயகமூர்த்தி
9. செ. சோமசுந்தரம்
10. செ. கந்தசாமி
11. பே. மகேந்திரன்
12. இ. நாகமுத்து
13. ப. பாலசிங்கம்
14. த. தங்கராசா
15. க. இராசலிங்கம்
16. இ. இராசேந்திரன்
17. த. சித்திரவேல்
18. க. தர்மலிங்கம்
19. க. சிதம்பரம்
20. வ. செல்லமுத்து
21. க. சங்குபதிபாக்கியராசா
22. பொ. சாரதாதேவி
23. க. முருகேஸ்
24. க. பாலசிங்கம்
25. செ. பொன்னம்மா
26. ச. பிறேமாவதி
27. வே நடராசா
28. ந. தெய்வலிங்கம்
29. கு. சதானந்தன்
30. சி. ஐயாத்துரை
31. க காணிக்குட்டி
32. கா. சந்திரன்
33. யோ. நாகேஸ்வரி
34. ச. வயிரமுத்து
35. ஆ. குமரவேல்
36. சொ. சந்திரவதனி
37. க. குணராசா
38. வ. அன்னராசா
39. யோ. காளிராசா
40. க. தியாகராசா
41. கு. அமராவதி
42. க. பாக்கியராசா
43. வ. கந்தையா
44. க. கனகசிங்கம்
45. ப. ஆறுமுகம்
46. செ. செல்வராசா
47. வ. ஒப்பிலாமணி
48. ந. வேலுப்பிள்ளை
49. ஐ. இராமலிங்கம்
50. க. கந்தசாமி
51. த. அழகம்மா
52. த. கந்தப்பு
53. க. காளியப்பு
54. ம. உதயகுமார்

## மலைமுந்தலில் வைத்து இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டவர்களின் விபரம்

1. ம. மகாலிங்கம்
2. ம. தட்டம்மை
3. ம. சிவம்
4. ம. சிவமதி

5. க. சண்முகம்
6. ச. வெள்ளையம்மா
7. ச. சிவரட்னம்
8. ச. பொன்னம்மா
9. ச. ஈஸ்வரி

10. கு. அருமைப்பூபதி
11. கு. வசந்தி
12. கு. நித்தியநாதன்
13. கு. ஜெயமதி

14. பொ. கனகரத்தினம்
15. க. காளியாட்சி
16. க. மஞ்சுளா
17. க.கோணலிங்கம்
18. க. விஜயலட்சுமி

19. செ. வெற்றிவேல்
20. வெ. பார்வதி
21. வெ. செல்வராணி
22. வெ. விக்கினேஸ்வரன்
23. வெ. செல்வன்

24. செ. தருமன்
25. த. ராஜேஸ்வரி
26. த. சிவக்குமார்
27. த சுதாகரன்

28. செ. ஜெயசங்கர்
29. ஜெ. சுந்தரி

30. க. கோமராசா
31. கே. அருந்ததி

32. ம. மணியம்
33. ம. ஈஸ்வரி
34. ம. நாகராசா
35. ம. காசிகலாபதி
36. ம.வைஜயந்தி
37. ம. விஜயலட்சுமி
38. ம. பரஞ்சோதி
39. ம. அருந்தா
40. ம. மனோகர்
41. ம. பாலன்
42. மணியம் ரவிச்சந்திரன்

## பகுதி 3

43. இ. இராசதுரை
44. இ. வையந்தி
45. இ. வாசகன்
46. இ. நதிகா

47. க. வடிவேல்
48. வ. செல்லராஸ்
49. வ. சந்திரன்
50. வ. ஜெயச்சித்திரா
51. வ. விஜயந்தி

52. க. கோபால்
53. கோபால் ஞானம்

## அகதிகளாக வந்து மலைமுந்தலில் இருந்த போது இராணுவத்தால் கொல்லப்பட்டவர்கள் விபரம்

1. கி. குணசேகரம்
2. கு. வசந்தி
3. கு. காவில்லான்
4. கு. காளியப்பு
5. க. சுப்பையா
6. சு. பூரணி
7. சு. இராசதுரை
8. சு. பாக்கியராசா
9. பா. ராணி
10. பா. சிவரட்ணம்
11. பா. காசி
12. செ. பாக்கியராசா
12. ரா. மகேஸ்வரி
13. ரா. பரமேஸ்வரி
14. ரா. தெய்வேந்தி

## சம்பூரில் காயப்படுத்தப்பட்டவர்களின் விபரம்

1. இ. சிறிரங்கராசா
2. ந. தவராசா
3. சி. யோகநாதன்
4. இ. காளிராசா
5. செ. சிறிபத்மநாதன்
6. கு. நாகமணி
7. இ. சிவானந்தராசா
8. அ. பொங்களாதேவி
9. ந. தவம்
10. இ. சொக்கலிங்கம்
11. சொ. அருளானந்தம்
12. தாமோதிரம்
13. புஸ்பன்
14. சோதிநாதன்

## தம்பலகமம் பிரிவில் கொல்லப்பட்டவர் விபரம்

1. M. பாலசுப்பிரமணியம்
2. சோ. சுந்தரம்
3. பா. முத்துலிங்கம்
4. க. கோணலிங்கம்
5. க. நாகராசா
6. க. உதயகுமார்
7. வே. விமலநாதன்
8. சு. கோணேஷ்வரன்
9. கா. சரவணமுத்து
10. ராஜநாதன்
11. வே. சுந்தரம்
12. சுந்தரவடிவேல்
13. கிருஷ்ணன்
14. சுப்ரா
15. கிருஷ்ணன்
16. சதாசிவம்
17. இராசதுரை
18. மா. தில்லைநாதன்

## கப்பல்துறை பிரிவில் கொல்லப்பட்டவர் விபரம்

1. சுப்பிரமணியம்
2. நெ. மணியம்
3. க. இராமச்சந்திரன்
4. மணி
5. இ. செபஸ்தியன்

## கந்தளாய் பிரிவில் கொல்லப்பட்டவர் விபரம்

1. தேவன்
2. குமுதன்
3. மணிமாறன்
4. சுதாகரன்
5. குஞ்சன்
6. தயாபரன்
7. அலி
8. சுல்தான்
9. க. குமுதன்
10. வே. கணேஷ்

## வெள்ளைமணல் பிரிவில் கொல்லப்பட்டவர் விபரம்

1. அன்ரூஸ்
2. செபமாலை

## கோவில்கிராமம் பிரிவில் கொல்லப்பட்டவர் விபரம்

1. த. யோகராசா
2. ஜி. சந்திரசேன

## கவாட்டிக்குடா பிரிவில் கொல்லப்பட்டவர் விபரம்

1. இராமச்சந்திரன்
2. இ. ராணி

## வேறு இடங்களில் இருந்தவர்கள் அகதிகளாக சம்பூரில் இருந்தபோது இராணுவத்தால் கொல்லப்பட்டவர்கள்

| | |
|---|---|
| 1. த. வரதராசா | கங்குவேலி |
| 2. சி. கிருஷ்ணபாலன் | ,, |
| 3. பூ. சித்திரவேல் | ,, |
| 4. வ. பாக்கியராசா | LB-3 |
| 5. ம. மகாலிங்கம் | LB-3 |
| 6. கோ. காளிராசா | பாரதிபுரம் |
| 7. சா. தேவன் | ,, |
| 8. தோ. நடராசா | ,, |
| 9. பொ. சவுந்திரராசா | LB-6 |
| 10. க. கோணமலை | மேன்காமம் |
| 11. க. கனகசரஸ்வதி | கிளிவெட்டி |
| 12. சிவசாமிக்குருக்கள் | யாழ்ப்பாணம் |
| 13. பெயர் தெரியாதவர் | தம்பலகாமம் |
| 14. க. தேவன் | கடற்கரைசேனை |
| 15. பொ. சவுந்திரன் | மேன்காமம் |
| 16. ராதாகிருஷ்ணன் | திருக்கோணமலை |

## சம்பூரில் சுட்டுக் கொல்லப்பட்டவர் விபரம்

1. நா. சிவனேசன்
2. ச. உதயமோகன்
3. ஓ இந்திரகுமார்
4. கோ. நவரத்தினம்
5. மு. விஜயகாந்தன்
6. மு. விஜயநாதன்
7. பு. செல்வக்குட்டி
8. த. திலகநாதன்
9. ம. சேனாதிராசா
10. ரா. ஜெகதீஸ்வரன்
11. க. சண்முகராசா
12. இ. பத்மநாதன்
13. சி. கவுரிரூபன்
14. சோ. சந்திரகாந்தன்
15. க. நித்தியசீலன்
16. பொ. சத்தியானந்தகுரு
17. சோ. சோமேஸ்வரன்
18 பா. ராமச்சந்திரக்குருக்கள்
19. இ. சொக்கலிங்கம்
20. த. வெற்றிவேலு
21. வே. சுந்தரலிங்கம்
22. பே. அருமைப்பிள்ளை
23. க. பேச்சமுத்து
24. சி. கனகலிங்கம்
25. ந. அருணாசலம்
26. கோ. சிவலிங்கம்
27. இ ஸ்ரீதங்கராசா
28. ந. நவராசா

## கூனித்தீவில் இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள்

1. க. செல்வராசா
2. சு. விநாயகநேசன்
3. செ. இராசரத்தினம்
4. இ. வாமதேவன்
5. வை. சிவசுப்பிரமணியம்
6. இனம்தெரியாதவர் 8 பேர்

## கடற்கரைச்சேனையில் கொல்லப்பட்டவர்களின் விபரம்

1. வைரமுத்து
2. வை. துரையம்மா
3. வீ. யோகநாயகி
4. வீ. ஜீவநந்தினி
5. பீ. சர்ணதாசா
6. பீ. சோமதாசா
7. சா. தேவராசா
8. மு. செல்வன்
9. சிவா
10. பெயர்தெரியாதவர்
11. காளியப்புத்துரை
12. இனம் தெரியாதவர்–இரண்டு பேர்

## சேனையூர் 5ஆம் வட்டாரத்தில் இராணுவத்தால் கொல்லப்பட்டவர்

1. செ. வசந்தன்
2. அரியநாதன்
3. செ. லிங்கேஸ்வரி
4. ச. சங்கர்
5. செ. சங்கர்
6. மா. வெள்ளாட்சி

## மட்டக்புக்கழி என்ற இடத்தில் வைத்து இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டவர்கள் விபரம்

1. க. கந்தசாமி
2. பா. கனகரத்தினம்
3. கா. கோபால்
4. சண்முகம்
5. M. மகாலிங்கம்
6. K. வடிவேல்
7. யோமியோதுரை
8. மைக்மணியம்
9. மைக்மனோகர்
10. செ. பாக்கியராசா
11. க. சோமராசா
12. செ. சங்கர்
13. மா. இராசதுரை
14. பா. சிவஞானம்
15. செ. வெற்றிவேல்

## உப்புவெளியில் சுட்டுக்கொல்லப்பட்டவர் விபரம்

1. கோ. அல்விராசா

## இலங்கை இராணுவத்தால் 06-07-1990 அன்றும் அதன் பின்னரும் காயமடைந்த பொதுமக்களின் விபரம்

1. வி. சொக்கன்
2. சி. கோமலா
3. அரியநாதனின் மகன்
4. ச. ராணி
5. க. சுந்தரமூர்த்தி
6. அமிர்தலிங்கம்
7. அ. மைனா
8. மா. விஜி
9. அ. அன்னலட்சுமி
10. அ. சுதாகர்
11. அமிர்தம்
12. சி. கனகராசா
13. செ. ராணி
14. அ. தீபன்
15. அ. சந்திரிகா

(தொடரும்)

### சிந்தனைக்கு

சாதாரண அமெரிக்கன் சரியானவன்தான்; இலட்சியவாதி அமெரிக்கன்தான், ஒரே குழப்பப் போவழி.

சி. கே. செஸ்ட்டர்ட்டன்

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 23-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ எண் 05

# அமெரிக்காவின் அச்சுறுத்தல்

வளைகுடாப் பிரச்சினையில் அமெரிக்காவின் நடவடிக்கைகள் இன்று பெரும் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளதோடு, மூன்றாம் உலக நாடுகளுக்கு பெரும் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

கிரனடா, பனாமா வரிசையில் இன்று ஈராக்கை வீழ்த்தும் திட்டத்தில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. வளைகுடாவில் அமெரிக்காவின் பிரதான போர்த்திட்டம் ஈராக்கிய இராணுவத்தையும் அதன் தலைவர் சதாம் உசைனையும் அழித்தலாகும். இத்திட்டத்தை வளைகுடாவிற்கான அமெரிக்க விமானப்படைத் தளபதி மைக்கல் டகன் வெளியிட்டார். இதனால் அவர் பதவி நீக்கமும் செய்யப்பட்டார்.

இந்தப்போர்த்திட்டத்தில் ஈராக்கையும் அதன் தலைவரையும் அழிப்பதன் பிரதான நோக்கம் குவைத்தையும், சவுதிஅரேபியாவையும் பாதுகாப்பதல்ல குவைத்தின் பேரிலும், சவுதிஅரேபியாவின் பேரிலும் யுத்தத்தை நடத்தி அமெரிக்காவினதும் அதன் மேற்குக் கூட்டாளிகளினதும் நலனைப் பாதுகாத்தலேயாகும்.

குவைத்தை ஈராக் ஆக்கிரமித்ததை எவ்வாறு நியாயப்படுத்த முடியாததோ, அதேபோன்று வளைகுடாவில் அமெரிக்காவின் போர்க்கோலமும், போர்த்திட்டமும் நியாயப்படுத்த முடியாதவையாகும்.

இன்று ஈராக்கிற்கு எதிரான ஐ.நா. பாதுகாப்புச்சபை தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக அமெரிக்கா வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றது. ஆனால் கடந்த காலத்தில் ஐ நாவையும், அதன் கொள்கைகளையும் அமெரிக்கா எவ்வாறு பேணி வந்தது என்பதை தெரிந்துகொண்டால் அமெரிக்காவின் சுயநலப்போக்குத் தெளிவாகத் தெரியவரும்.

கடந்த காலத்தில் அமெரிக்காவின் கொள்கைகளுக்கு ஐ.நா. பணிந்துபோகாதபோதுதான் ஐ நாவில் இருந்து வெளியேறப்போவதாக அமெரிக்கா தெரிவித்துவந்ததோடு ஐ நாவிற்குரிய நிதி உதவியையும் வெட்டப் போவதாக மிரட்டியும் வந்தது. (ஒரு பகுதி நிதி ஒதுக்கீட்டையும் வெட்டியும் உள்ளது) இந்த நிலையில் ஐ.நா. ''மதித்து'' வந்த அமெரிக்கா இன்று ஐ.நாவின் பாதுகாவலன் எனக் கூக்குரல் இடுகின்றது.

சோவியத் யூனியனில் கொர்பசேவ் ஆட்சிக்கு வந்ததும் படிப்படியாக அமெரிக்காவிற்கும், சோவியத் ரஷ்யாவிற்குமிடையில் இருந்த முறுகல் நிலையும், கெடுபிடி யுத்தநிலையும் முடிவிற்கு வந்தன. அதாவது உலக ஆதிக்கப் போட்டியில் இருந்து சோவியத் விலகியது அல்லது அமெரிக்கா வெற்றிகொண்டதெனலாம்.

கடந்த காலத்தில் உலகில் நிலவிய கெடுபிடி யுத்தநிலையும், சக்தி சமநிலையும் மூன்றாம் உலக நாடுகளுக்கு சில பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி வந்ததாலும், இந்த நிலைமை மூன்றாம் உலகநாடுகளின குறிப்பாக சிறிய நாடுகளின் இறைமையைப் பாதுகாத்து வந்ததென்றே கூறலாம். – அதாவது அணுவாயுதங்களைப் பலர் வைத்திருந்தமையால் அணுவாயுத யுத்தம் தவிர்க்கப்பட்டது என்ற கருத்தை ஒத்தது - அவ்வாறு இல்லாவிடில் கியூபா போன்ற நாடுகள் இன்று உயிர் வாழ்ந்திருக்க முடியாது.

ஆனால் இன்று சக்தி சமநிலையில் ஏற்பட்ட மாற்றமும், அதில் அமெரிக்காவினதும் அவர்களின் மேற்கத்தைய கூட்டாளிகளினதும் கை ஓங்கியுள்ளமையும் இன்று அவர்களின் நடத்தையும் அமெரிக்க எதிர்ப்புப் போக்குடைய சிறிய நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

இந்நிலையில் சர்வதேச ஸ்தாபனங்களும் நிதானமான போக்கைக் கைவிடுமானால் சிறிய நாடுகளின் பயம் நியாயமானவையாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

# அமெரிக்காவின் மிரட்டலுக்கு பணியப் போவதில்லை

அமெரிக்காவின் எந்தவித மிரட்டலுக்கும் பணிந்துவிடப் போவதில்லை எனவும், அமெரிக்காவுடன் ஒரு நீண்டகாலப் போருக்கு ஈராக் தயாராகி வருவதாகவும், ஈராக்கிய அதிபர் சதாம் உசைன் தெரிவித்துள்ளார்.

குவைத்திலிருந்து ஈராக் ஒரு நாளும் வெளியேறப் போவதில்லை என்றும், பலஸ்தீனியருக்கு நாடு ஒன்றை அமைப்பதும், புனித ஸ்தலங்களான மதினாவையும், மெக்காவையும்கைப்பற்றுவது தமது திட்டமெனவும் தெரிவித்த சதாம்உசைன் போர் ஒன்று நிகழுமாயின் அமெரிக்காவின் இலக்குகள்யாவும் தாக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# நெருக்கடிகால விவசாய ஆலோசனைகள்

*பீடை நாசினிகள்:-*

யாழ் மாவட்டத்தில் இரசாயன பீடை கொல்லிகளின் பாவனை மிக அதிகம். சில வேளைகளில் அளவுக்கு அதிகமாகப் பீடை கொல்லிகள் பாவிக்கப்படுகிறது. இதன் காரணமாக விவசாயி அதிக பொருட் செலவுக்கு உள்ளாவதுடன், பாவனையாளன் இச்செறிவு கூடிய தீய உணவுப் பொருட்களை உண்பதன்மூலம் பல தீய சுகாதார விளைவுகளை எதிர்நோக்குகின்றான் எனவே இரசாயன பீடை கொல்லிகளின் பாவனையைக் குறைத்தல் அவசியமாகிறது. குறிப்பாக மிளகாய், வெண்காயம், கத்தரி, கோவா, வெண்டி. கீரை மற்றும் திராட்சை போன்ற பயிர்களில் இவற்றின் பாவனை மிக அதிகம். அத்துடன் தற்போது பீடை நாசினிகளின் தட்டுப்பாடும் நிலவுகின்றது

எனினும் நோய்களைக் கட்டுப்படுத்தவும், பூச்சிகளைக் கட்டுபடுத்தவும் பீடை கொல்லிகளின் பாவனை மிக அவசியமாகிறது. நிகழ்ந்து கொண்டிருக்கும் போரினால் இவற்றை எதிர்காலத்தில் விவசாயிகள் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும். எனவே இதற்கான மாற்று வழிகளைக் கண்டறிவது அவசியமாகிறது.

*பூச்சி நாசினி:*

மிளகாய் பயிரில் ஏற்படும் சிற்றுண்ணி, பனிப்பூச்சி, கத்தரியில்ஏற்படும் காய்த்துளைப்பான், வெண்டி, கோவாவில் ஏற்படும் இலை தின்னிப் புழுக்கள் போன்ற பூச்சித் தாக்கங்களை கட்டுப்படுத்த இரசாயன பூச்சி நாசினிகள் அவசியமாகிறது. இம் மருந்துகள் கிடைக்காத பட்சத்தில் மேற்படி பூச்சிகளால் ஏற்படும் அழிவுகளைக் கட்டுப்படுத்தல் கடினமாகும்.

சமீபத்தில் இத்தகைய பூச்சிகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் வேப்பெண்ணெய்க்கு உள்ள சக்தி அறியப்பட்டுள்ளது. வேப்பெண்ணெயின் பயன்பாட்டால் முழுமையான பயனைப் பெறமுடியாவிட்டாலும் ஓரளவு பயனை பெற முடியும் அத்துடன் கூடவே இரசாயன பூச்சி கொல்லிகளால் ஏற்படும் தீய பக்க விளைவுகள் இதனால் அறவே தவிர்க்கப்படுகிறது.

*கலவை விகிதம்:*

2 திரவ அவுன்ஸ் 3 கலன் நீரில் சிறிதளவு சவர்க்கார கரைசலுடன் சேர்த்து வேப்பெண்ணெயைக்கலந்து வாரம் ஒருமுறை விசிறவும்.

*வேப்பம் விதைகளை பூச்சி கொல்லியாக பாவித்தல்:*

இடித்த வேப்பம் விதைகளை ஊறவைத்து வடிகட்டிய கலவையை பாவிப்பதன் மூலம் ஓரளவு பூச்சிகளை கட்டுப்படுத்த முடியும்.

4 திரவ அவுன்ஸ் கலவை 2 கலன் நீரில் கிழமைக்கு ஒருமுறை தெளித்தல் நன்று.

*1. நாற்று மேடைகளில் தொற்று நீக்கம்*

வைக்கோல் / நெல் உமியை நன்கு தயாரிக்கப்பட்ட நாற்றுமேடைகளில் எரிப்பதன் மூலம் மண்ணின் ஊடாகத்தோன்றும் நோய்களையும் களைகளையும் கட்டுப்படுத்த முடியும்.

*2. பொலித்தீனால்மூடுதல்*

தயாரிக்கப்பட்டமேடையை விதைகள் விதைப்பதற்கு முதல் 3 / 4 கிழமைகளுக்கு முன் மேடைகளை மூடக் கூடிய அளவு பொலித்தீன் மூலம் மூடிவிடவேண்டும். வெண்மையான (நிறமற்ற) பொலிதீனே இதற்கு நன்று இச்செயலால் மேடை உஷ்ணம் கூட்டப்படுவதால் நோய்களைப் பரப்பும் வித்திகளும் களைகளின்விதைகளும் முளைதிறனை இழந்து விடுவதால் நோய், களை அற்ற நாற்று மேடைகள் அமைக்க முடியும்.

*பூஞ்சண நாசினிகள்*

பூஞ்சண வியாதிகளைப் பொறுத்தவரை நெடுங்காலமாகபயன் படுத்தப்பட்டுவரும் ''போடோ'' கலவை தற்பொழுது கைகொடுத்து உதவக் கூடியதாக உள்ளது. குறிப்பாக திராட்சை பயிர்ச் செய்கையாளருக்கு மாரிகாலத்தில் வரக்கூடிய பனிப்பூஞ்சண நோயிலிருந்துபாதுகாப்பு அளிப்பதற்கு பெரிதும் பயனுள்ளதாகும்,

இக்கலவையை பூசணிக் குடும்பப் பயிர்கள் தவிர்ந்த ஏனைய பயிர்களுக்கு ஏற்படும் பூஞ்சண நோய்களைக் கட்டுப்படுத்த பயன்படுத்தலாம்.

உடன் தயாரித்த ''போடோ'' கலவையை நோய் கண்ட பயிர்களுக்கு பத்து நாட்களுக்கு ஒரு முறை தெளிததல் பயன் அளிக்கும்.

தமிழீழ ஆய்வு நிறுவனம்

# மேற்கு ஐரோப்பிய நாட்டு தூதர்கள் வெளியேற ஈராக் பணிப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் உள்ள ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்தைச் சேர்ந்த நாடுகளின் தூதுவராலயத்தைச் சேர்ந்த இராணுவ ஆலோசகர்களையும், சில இராசதந்திரிகளையும் ஈராக்கை விட்டு வெளியேறுமாறு ஈராக் அரசாங்கம் பணித்துளளது.

ஐரோப்பிய பொருளாதாரச் சமூக நாடுகளில் இருந்து ஈராக்கிய தூதுவராலய அதிகாரிகள் வெளியேற்றப்பட்டதற்கு பதிலடியாகவே ஈராக் இந் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

இத் தூதுவராலய அதிகாரிகள் வெளியேற்றத்தை பற்றி கருத்து வெளியிட்ட பிரிட்டிஷ் பிரதம மந்திரி மாக்றெட்தச்சர்இது ஒரு நியாயப்படுத்த முடியாத செயல் எனத் தெரிவித்துள்ளார்.

அதே வேளை பிரிட்டனில் இருந்து 30 ஈராக்கிய அதிகாரிகள் வெளியேற்றப்பட்டது தெரிந்ததே.

# லைபீரியாவில் கிளர்ச்சியாளர் அமைதிப்படை மோதல்

(லைபீரியா)

லைபீரியாவில் உள்ள மேற்கு ஆபிரிக்க நாடுகளின் அமைதிகாக்கும் படை கிளர்ச்சியாளரை முறியடிக்கும் வரை போராடப்போவதாக அறிவித்துள்ளது.

லைபீரியா அரசபடைகளுக்கும், கிளர்ச்சியாளருக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தவே இந்த மேற்காபிரிக்கப் படைகள லைபீரியா சென்றன. ஆனால் லைபீரியா கிளர்சசியாளர்கள் லைபீரிய ஜனாதிபதி அமைதிப்படை முகாம் ஒன்றில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தபோது அம்முகாமைத் தாக்கி ஜனாதிபதியைக் கைது செய்தார்கள் என்பதும், பின்னர் ஜனாதிபதி இறந்துவிட்டதாக அறிவித்திருந்ததும் தெரிந்ததே.

# சண்டிகாரில் 35பேர் இராணுவம் சுட்டு மரணம்

(சண்டிகார்)

பிற்பட்ட வகுப்பாருக்கு இட ஒதுக்கீடு செய்யும் மண்டல் கமிஷன் அறிக்கையை அமுல்படுத்தும் தேசிய முன்னணி அரசின் கொள்கைக்கு எதிராக சண்டிகாரில் நேற்று முன்தினம் பெரும் ஆர்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

இவ் ஆர்ப்பாட்டக்காரரைக் கலைக்க இராணுவம் சுட்டதில் 35பேர் பலியானதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆர்ப்பாட்டக்காரர்கள் கடைகள், வாகனங்கள் என்பவற்றிற்கு தீவைக்கத் தொடங்கியதை அடுத்தே இராணுவம் வரவழைக்கப்பட்டது. நூற்றுக் கணக்கான அரச வாகனங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் தீவைக்கப் பட்டது.

## உயிரினும்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும்விடுதலைப் புலி வீரர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கிறார்கள். வடக்கு கிழக்கு அடங்கிலுமுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் புலிகள் முன்னெடுக்கும் இந்த சாத்வீகப் போராட்டத்தில் அணிதிரள வேண்டும். மக்களின் ஒன்றுதிரண்ட சக்தி மூலமே மக்களின் ஒருமுகப்பட்ட எழுச்சி மூலமே நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம் திலீபனின்டு இணையற்ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்புஇதுதான்.

# விசர் பிடித்த நாய்போல சிறிலங்கா படைகள் அழிப்பில் ஈடுபட்டுள்ளன

-மூர்த்தி

(பருத்தித்துறை)

விசர் பிடித்த நாய்போல் யார் எவர் என்றில்லாமல் சிறிலங்கா அரசின் முப்படைகளும் அழிப்பு யுத்தம் ஒன்றை நடத்தி வருகின்றன என வியாழக்கிழமை பருத்தித்துறை வட்ட அவைக் கூட்டத்தில் பேசும்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயற்குழு உறுப்பினர் திரு. மூர்த்தி உரையாற்றுகையில் தெரிவித்தார். இக் கூட்டத்திற்கு பருத்தித்துறை வட்ட அவை உறுப்பினர் கருணானந்தராசா தலைமை வகித்தார்.

மேலும் பேசிய மூர்த்தி தற்போது சிறிலங்கா முப்படைகளும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழ மக்களுக்கும் எதிராக நடததி வரும் தாக்குதலை எதிர்க்கும் எமது போர் முனைப்படைத்துள்ளது என்றார். கடந்த காலங்களைப் போலல்லாது தற்போது தமிழீழமெங்கும் தமிழீழ விடுதலைப்புலிகளால் நிகழ்த்தப்படும் சிங்கள அரசுக்கெதிரானபோர் ஓர் இறுதிக்கட்ட போராகும் என்றும் கூறினார்.

இப் போராட்டத்திற்கு தமிழ் மக்களின் ஒருமித்த பங்களிப்பு உடனடியாகக் கிடைக்குமே ஆனால் விரைவிலேயே தமிழீழம் அமையும் எனவும் கூறினார். இதற்காக நாம் எமக்கென ஓர் படையை அமைப்பதாலும் மக்கள் மனமுவந்து மண்மீட்பு நிதிக்கு வாரி வழங்குவதாலும், தமிழ் மக்கள் தமிழீழத்தை விட்டு வெளியேறுவதை நிறுத்தியும் வீண் வதந்திகளைந் பரப்பாமலும் தமிழீழ போராட்டத்தில் எல்லோரும் பங்கு கொள்ள இணைவதாலும் சுதந்திர தமிழீழத்தை நிறுவி விட முடியும் எனவும் கூறினார்.

எனவே இப் போராட்டத்தில் மக்களை போராட்டத்தின் பங்காளிகளாக ஆக்கும் மகோன்னத பணியை ஒவ்வொரு சிற்றூர்அவை உறுப்பினரும் மேற்கொள்ள வேண்டும் எனவும் அறை கூவினார்.

# இறப்பு, பிறப்புக்களைதவறாது பதியுமாறு வேண்டுகோள்

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைக்கால அரச பயங்கரவாத நடவடிக்கைகளினால் காணி, மேலதிக மாவட்டப் பதிவகம் சேதமடைந்து செயலிழந்துள்ளது. ஆயினும் ஆவணங்கள் அனைத்தும் பாதுகாப்பாக வேறிடத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

விவாகம், பிறப்பு, இறப்பு பதிவு வேலைகள் அவ்வப் பகுதிப் பதிவாளர்களினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப் படுகின்றன. அண்மைக்காலத்தில் பல இறப்புகள் நிகழ்ந்துள்ள போதிலும் இதுவரை 10 பேரினது இறப்புகளே பதியப் பட்டுள்ளன. இறப்புகள் உரிய காலத்துக்குள் பதியப் படாவிட்டால் சரியான புள்ளி விபரங்கள் பெறப்பட இயலாதுபோவதுடன் பொதுமக்களும் சிரமங்களுக்கு ஆளாக நேரிடும்.

எனவே மரணமடைந்தவர்களின் உறவினரோ அல்லது உடனிருந்தோரோ உடனடியாக அவ்வப்பகுதிப் பதிவாளர் மூலம் இறப்புக்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கிளிநொச்சி காணி மேலதிக மாவட்டப் பதிவாளரினால் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள் இப்பதிவுகளைவிரைவாகவும் இலகுவாகவும் செய்து கொள்வதறகாக கிளிநொச்சி, பளை, பூநகரி, கண்டாவளை ஆகியபிரிவுகளின்உதவி அரசாங்கஅதிபர் யாவரும் மேலதிக மாவட்டப் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். எனவேஇறப்புக்களைப் பதிவு செய்து கொள்வதில் அசிரத்தை காட்டாமல் உடனடியாகப் பதிவு செய்து கொள்ளுமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பரந்தன் பதிவாளர் திருமதி இந்திரா பத்மநாதன் அவர்களின் காரியாலயம் தற்போது கிளிநொச்சி, உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் பகுதியில் இயங்கிவருகிறது. பரந்தன் பிரிவு மக்கள் அவரை மேற்படி முகவரியில் சந்திக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

## கூட்டுறவு உத்தியோகத்தர் சமுகம்தரவும்

பரந்தன் மக்கள் வங்கிக்கட்டடத்தில் அமைந்திருந்த கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகம் இராணுவ நடவடிக்கை காரணமாகச் சேதமடைந்ததால் பூநகரியில் பழைய இறங்குதுறை வீதியில் இயங்கிவருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமை புரியும் கூட்டுறவு உத்தியோகத்தர் அனைவரையும் நாளை திங்கட் கிழமைமுதல் பூநகரியில் அமைந்திருக்கும் புதிய அலுவலகத்தில் சமுகம் அளிக்குமாறு கிளிநொச்சி கூ. ச. உ ஆணையாளர் க. பஞ்சலிங்கம் பணித்துள்ளார்.

# இடம்பெயர்ந்தோர் இலவச உணவு பெறத் தகுதிபெற்றவர்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தங்கியுள்ள கிராம சேவகர் பிரிவுக்கூடாகவே இலவச உணவுப் பங்கீட்டுக்கான அனுமதிப் பத்திரத்தை (பெர்மிட்) பெற உரித்துடையவர்கள்.

இடம்பெயர்ந்தவர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட எவருக்கும் கை இருப்பில் உணவுப் பொருட்கள் உள்ள நிலையில் பங்கீட்டுக்கான உணவுப் பொருட்களைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்காதுவிட முடியாது என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் புனர்வாழ்வுப் பிரிவு நேற்று விடுத்த அறிக்கையில் தொவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் பங்கீட்டு உணவுப் பொருட்களை பெறமுடியாது அலைந்து திரிகின்றனர். ஆகவே அரசாங்க அதிகாரிகளும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இவ் விடயங்களைக் கவனத்தில் எடுத்துச்செயற்படவேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் மேற்படி இலவச உணவுப் பங்கீட்டைப் பெறுவதில் ஏதாவது தடைகளிருப்பின் எம்முடன் தொடர்பு கொள்ளும்படியும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் புனர்வாழ்வுப் பிரிவு அவ்வறிக்கையில் தெரிவிததுள்ளது.

## வீரவணக்கம்

நேற்று நண்பகல் மண்டைதீவு இராணுவமுகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்தாக்குதலில் தொலைத்தொடர்பு நிலையத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த வீரவேங்கை சத்தியன் (பெரியண்ணன் ஜெகராஜா, அம்பன், குடத்தனை) வீரமரணம் அடைந்தார். அவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# "தர்மம் தோற்றதாக சரித்திரமே இல்லை"

-புதுவை

(பொலிகண்டி)

பொலிகண்டி மேற்கு சிற்றூர் அவைப் பகுதியில் மண் மீட்புநிதி சேகரிப்பு விக்கவுரைக் கூட்டம் சிற்றூர் அவைத் தலைவர் திரு. சி இரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது. யாழ்மாவட்ட அரசியல் அமைப்பாளர் திரு. ராஜன் அவர்களின் உரையை தொடர்ந்து திரு. புதுவை இரத்தினம் அவர்கள் ஆற்றிய உரையில்சிங்களஅரசு தொடுத்துள்ள இந்த யுத்தம் விடுதலைப்புலிகளுக்கு மட்டும் எதிரானதல்ல முழுதமிழீழமக்களுக்குமே எதிரானதாகும். இதுஓர் தர்மயுத்தம். தர்மம் தோற்றதாகசரித்திரமே இல்லைஎன்றார். ஆரயபத்தில் ஒரு சில நூற்றுக்கணக்கான வீரர்களைக்கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று பல லாயிரக்கணக்கான வீரர்களை கொண்ட ஓர் படையாக பரிணமித்துள்ளதையும் சுட்டிக் காட்டினார்.

## அடையாள உண்ணாவிரதம்

தியாகி திலீபனின் நினைவாக புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கலலூரியில் முழுநாள் அடையாள உண்ணாவிரதம் 25ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறும்.

கோப்பாய் பிரிவு வட்டவை மற்றும் சிற்றூரவையாளரின் ஏற்பாட்டில் அடையாள உண்ணாவிரதம் நடைபெறுகின்றது. (16)

## விமானக்குண்டு வீச்சு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரைமட்டமாகியது. எட்டு வீடுகள் சேதமடைந்தன. கற்பக விநாயகர் கோயிலும் பலத்த சேதங்களுக்குள்ளாகியது. தரைமட்டமாகிய வீட்டில் இருந்த மணியம் (வயது 38) என்பவர் ஸ்தலத்திலேயே மரணமானார்.

கற்பக விநாயகர் கோயிலில் பொங்கலில் ஈடுபட்டிருந்த பக்தர்களில் இருவர் காயங்களுக்குள்ளாகினர்.

காயமடைந்தவர்களின் விபரம் வருமாறு:

மயில்வாகனம்(50) என்பவர் பலத்த காயமடைந்தார். இவர் அவசர சிகிச்சைக்காக மானிப்பாய் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

சுசிலா (24 வயது), செல்வநாயகம் (34வயது), திருநாவுக்கரசு 56) என்பவர்களே ஏனைய காயமடைந்தவர்கள் ஆவர்- (றெ)

## எதிர்க்கட்சிகள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நடவடிக்கை பற்றிக குறிப்பிடுபோது இதில் அரசாங்கம் நீண்ட காலத்திலேயே வெற்றிபெற முடியும் எனவும் தெரிவித்தார்.

## யாழ்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகாலவரை மேற்படி வீதி இராணுவத்தால் தடை செய்யப்பட்டிருந்தும் பூந்தோட்ட வழியாக மக்கள் நகரப்பகுதிக்கு வந்து செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்கியிருந்ததுப் தெரிந்ததே.

தற்போது தாம் யாழ் வீதியைத் திறந்துவிட்டோம் என்றும், இதன் வழியாக மக்கள் நகரப்பகுதிக்கு போக்குவரத்தை மேற்கொள்ளலாம் என்றும் கூறிஇராணுவத்தால், நகரப்பகுதி செல்லும் மக்களும், வாகனங்களும் யாழ் வீதிவழியாக அனுப்பிவைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

தமிழ்மக்களை முன்னே விட்டு, பின்னே சென்று தமிழ் மக்களின் பகுதிகளில் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கே இராணுவம் முயற்சி செய்கிறது என்றும் இதன்காரணமாகவே நகரப் பகுதி செல்லும் மக்களின் தொகை குறுகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படடது. (தி)

## திருக்கோணமலை

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம்பலகமம் அகதிமுகாமில் கொ்ல்லப்பட்டோர் விபரம்

1. திருமதி ஞானசேகரம்

நிலாவெளி அகதிமுகாமில் கொல்லப்பட்டோர் விபரம்

2. சூரி
3. மணியம்
4. மேலின்
5. மோகன்
6. வாசு
7. ரீட்டா

கந்தளாய் 1ஆம் கொலனி அகதிமுகாமில் கொல்லப் பட்டோர் விபரம்

1. ஆரோக்கியம்
2. சீனித்தம்பி
3. சுந்தர் சிங் சுரேஸ்
4. அல்லிராசா
5. யோ. பூபாலபிள்ளை
6. செ, சேபிரியல்
7. சங்கர்
8. ச. ஜெயபாலன்
9. துரைசிங்கம்
10. சிவலிங்கம்
11. நொச்சிநாரை

உப்பாற்றில் எறிகணை தாக்குதல்

1. த. செல்வமலர்
2. கை. வர்ணகுலசிங்கம்
3. ந. சிவஞானசுந்தரம்
4. தேவசகாயம்
5. காவிராசா

(முற்றும்)

## திருநெல்வேலி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ந்த தாக்குதலிலும் மூவர் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

உயிரிழந்த இருவரின் பெயர்களும் வருமாறு;பி. குகபாலன் (வயது40) சுப்பிரமணியம் (வயது 50)

## ஓட்டுமடம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான்சைனூஸ் ஆகியோரே படு காயமடைந்தவர்களாவர்.

இக்குண்டுவீச்சினால்நான்கு வீடுகள் தரைமட்டமாயின. ஏழு வீடுகள் சேதமடைந்தன. (றெ)

## சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி யாழ. 2 ஆவது கிளையைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களையும் நாளை 24ஆம் திகதி திங்கட் கிழமை காலை 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக ஆனந்த குமாரசுவாமி விடுதி முன்னால் உள்ள 144 பொன் இராமநாதன் வீதியிலுள்ள இல்லத்தில் சமுகந்தருமாறு அதன் முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## சிகரெட் பிடிபட்டது

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை கணக்கர் சந்தியில் வியாபாரம் செய்யும் நபர்ஒருவரிடமிருந்து ஒரு பண்டல் சிகரெட் விடுதலைப் புலிகளால் கண்டு பிடிக்கப்பட்டது. நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தீவிர பரிசோதனையின் போதே மேற்படி சம்பவம் நிகழ்ந்துள்ளது, வியாபாரம் செய்த நபர் விசாரணைக்காக விடுதலைப் புலிகளால் கொண்டு செல்லப்பட்டார். (43)

## முஸ்லிம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குச் சொந்தமான கரைவலை, மீன்பிடிப்படகுகள், உட்பட ஐந்திற்கும்மேற்பட்ட வீடுகளுக்கும் தீவைத்துள்ளனர். (க)

## மரண அறிவித்தல்

### எம். ஏ. எட்வேட்

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் உதவிப் பொறியியலாளராகக் கடமை புரிந்த எம்.ஏ. எட்வேட் காலமானார். சில்லாலையைச் சேர்ந்த றோகினியின் அன்புக் கணவரும், சஜீவின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற மரியாம்பிள்ளை மரியநாயகம், திருமதி மேரி யோசேப்பின் மரியநாயகம் ஆகியோரின் அன்பு மகனும், மேரிஸ்ரலா, றெக்சிஸ், சில்விக்ஸ், ஜெசி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. திருமதி செபஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், நவறாஜா (அவுஸ்ரேலியா) றாஜினி (கனடா), றஞ்சினி, சறோஜினி(அவுஸ்ரேலியா) N.S. லிங்கரட்ணம், ரைனி, E. J. எட்வின் (ஓமான்) மனோ, வதனி (அவுஸ்ரேலியா), வெனாட் (கனடா), ராஜசிங்கம், லக்ஷ்மன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (23.09.90 ஞாயிறு)பி.ப. 3.30 க்கு எடுத்துச்செல்லப்பட்டு சில்லாலை சேமக்காலையில் அடக்கம செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொளளவும்.

சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு.

தகவல்: (R/646) M.S. பொன்னுத்துரை (மாமா)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது